# 8

# இயேசு பூமிக்கு வந்தது எதற்காக?

*''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' (யோவா. 17:4).*

நீங்கள் உங்கள் நகரில் நடந்து கொண்டிருக்கையில், ஒரு செய்தி நிருபர் வந்து உங்களிடத்தில், "உலகின் தொடக்கத்திலிருந்து இதுவரை நடைபெற்றுள்ளவற்றில் மாபெரும் ஒரு நிகழ்ச்சியாக நீங்கள் எதனை நம்புகின்றீர்கள்?" என்று கேட்டால், நீங்கள் என்ன கூறுவீர்கள்? நீங்கள் அவருக்கு எவ்வாறு பதில் அளிப்பீர்கள்? மனித வரலாற்றின் மற்ற நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் விட மேலோங்கியிருக்கும் அப்படிப்பட்ட நினைவுக்குரிய நிகழ்ச்சி எது? அதைப் பற்றி நீங்கள் நினைத்த பிறகு, இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு இரட்சகராக வருகை தந்த நிகழ்ச்சி என்பதே உங்கள் பதிலாயிருக்கும் என்பது நிச்சயம். நம்மில் ஒவ்வொருவரும் மாறுபட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவோம், ஆனால் நமது பதில்கள் யாவும், நம் பாவங்களுக்காக இயேசு மரித்த அந்த நிகழ்வையே மையம் கொண்டிருக்கும்.

தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் வாழ்வு, திரு அவதாரம், மாம்சமாகுதல் என்பதே உலக வரலாற்றில் மிகவும் எட்டத் தொலைவான நிகழ்ச்சியாக இருக்க வேண்டியதாகும். இயேசு தேவனுடைய சொரூபமாயிருந்தும் கூட, அவர் தாம் தேவனுக்குச் சமமாயிருப்பதை எவ்விலை கொடுத்தும் பற்றிக் கொண்டிருக்கும்படிக் கருதியதில்லை என்று பவுல் எழுதினார். அவர் "தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலி. 2:6, 7). யோவானின் கூற்றுப்படியாக, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14).

*கிறிஸ்து, தாம் தெய்வீகமானவரே அல்ல என்பது போல் அவ்வளவு அதிகம் மனிதத் தன்மையுள்ளவர் ஆனார், மற்றும் அவர் மனித் தன்மை உள்ளவரே அல்ல என்பது போல் அவ்வளவு அதிகம் தெய்வீகமானவரானார்*

என்று நாம் கூற முடியும். மற்ற எல்லா மனிதர்களும் பிறக்கின்றது போலவே அவரும் மனிதரானதில் (லூக். 2:6), எல்லா மனிதர்களையும் போலவே வளர்ந்ததில் (லூக். 2:40), எல்லா மனிதர்களும் சுதந்தரவாளிகளாய் இருந்து அனுபவிக்கும் பாடுகளுக்குக் கீழ்ப்பட்டதில் (எபி. 5:8, 9), மற்றும் வியாதி, அழிவு மற்றும் மரணம் ஆகியவற்றினால் பாதிக்கப்படக் கூடிய - மனிதர்கள் ஒரு சிலுவையில் கூட அறைய முடிந்ததான - ஒரு உடலில் வாழ்ந்ததில் (பிலி. 2:8, 9), இயேசு மனித இனத்துடன் தம்மை அவ்வளவு முழுமையாக அடையாளப்படுத்திக் கொண்டார். அவர் முற்றிலுமாக மனிதனானார், இவ்விதமாக அவர் மனித குமாரனாய் இருந்தார்; இருப்பினும் அவர் முற்றிலுமாகத் தெய்வீகமானவரானார், இவ்விதமாக அவர் தேவ குமாரனாய் இருந்தார் (எபி. 2:14, 17, 18). அவர், மனிதத்துவமும் தெய்வீகத்துவமும் ஒரே ஆள் தன்மையில் பரிபூரணமாய் இணையப் பெற்றவராக இருந்தார். அவர் தம் தெய்வீகத்தைத் தியாகம் செய்யாமலேயே மனிதரானார்; அவர் நம்மைப் போன்றவராகியும் கூட தெய்வீகமானவராகவே நிலைத்திருந்தார்.

பூமிக்கு இயேசு வந்ததின் இயல்பானது குறிப்பிடத்தக்க பெரிய கேள்விகளை எழுப்புகின்றது: இயேசு தாம் செய்த வகையில் பூமிக்கு எதற்காக வந்தார்? அவர் மனித இனத்திற்குள் பிரவேசித்து, நம் மத்தியில் வாழ்ந்து, சிலுவையில் மரித்ததற்கான நோக்கம் என்ன? தேவனுடைய தெய்வீக குமாரன் முற்றிலும் மனிதராகுமளவுக்குத் தம்மைச் சுருக்கிக் கொண்டது ஏன்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பின்வரும் ஒரே வாக்கியத்தில் தொகுத்துரைக்க முடியும்: *"அவர் - தம் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றினால் - தம் நாமத்திற்கு ஒரு மக்களை அழைக்க, தாம் தம் சபை என்று அழைக்கும் ஒரு மக்கட் கூட்டத்தை அழைக்கவே வந்தார்."*

வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், சபை என்பதே அவர் இப்பூமிக்கு வந்ததின் விளைவாய் உள்ளது. இயேசு ஒரு புத்தகத்தை எழுதவில்லை, ஒரு கல்லூரியை நிறுவவில்லை, சரீரப்பிரகாரமான ஒரு குடும்பத்தை நிலைநாட்டவில்லை அல்லது ஒரு உடமையின் கொடையிலிருந்து வைப்பு நிதியொன்றை ஏற்படுத்தவில்லை. சபை என்பதுதான் அவரது பூமிக்குரிய ஊழியத்தினால் உண்டாக்கப்பட்ட தெளிவாய் அறியக் கூடிய ஒரே உண்மை நிலையாய் உள்ளது. இயேசு தாம் கட்டியெழுப்புவதாகக் கூறிய ஒரே சரீரம் என்பது அவர் "சபை" என்று குறிப்பிட்ட (மத். 16:18) அவருடைய ஆவிக்குரிய சரீரமாகவே இருந்தது. இயேசு தம் ஊழியக் காலத்தின் போது இட்ட ஒரே அஸ்திபாரம் என்பது சபைக்குரிய அஸ்திபாரமாக இருந்தது. ஆகையால் சபையானது கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையில் நிலைநாட்டப்பட்ட ஒரே படைப்பு என்று கூறப்பட முடியும்.

## சுவிசேஷங்களினால் உறுதிப்படுத்தப்பட்டது

இந்த சத்தியமானது சுவிசேஷங்களினால் வலிவாக உறுதிப்படுத்தப்படுகின்றது. சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் இயேசு தமது மரணம்,

உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தெகொஸ்தேயன்று ஸ்தாபிக்கப்பட இருந்த பரலோக இராஜ்யமாகிய சபையைச் சுட்டிக் காண்பித்து, அதற்குள் வழிநடத்துகின்றது.

சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் வாழ்வைப் படிக்கின்ற ஒருவர், இயேசுவின் ஊழியம் பற்றிய பின்வரும் மூன்று தலைப்புகள் எழுகின்ற தினால் உணர்த்துவிக்கப்படுகின்றார்: (1) நிறைவேற்றுவதற்கு அவர் அமைத்த ஊழியம், (2) அவரது ஊழியத்தின் தயாரிப்பு இயல்பு, மற்றும் (3) அவரது ஊழியத்தின் நிறைவுறாத பண்பு.

முதலாவது, இயேசு தம் சொந்த ஊழியத்தின் போது உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிப்பதை ஏற்படுத்தாமல் இருந்தார். அவர் தம் அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு, அவர்களின் பிரசங்கித்தலுக்கு உலகளாவிய சிறப்புக் கட்டளையொன்றை அவர்களுக்குக் கொடுக்கா திருந்தார்; மாறாக, “நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற் போன ஆடு களாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்” (மத். 10:5, 6) என்று கூறியதன் மூலம் அவர்களின் வைராக்கியத்தை அமைதிப்படுத்தினார். நாம் திகைப்படையும் வகையில், இயேசு தம் ஊழியத்தின் போது, தம்மைப் பலஸ்தீனத்திற்குள் வரையறைப்படுத்திக் கொண்டார். அவர் ரோம உலகத்தின் மற்ற நாடுகளுக்கு ஒருக்காலும் சென்றதில்லை. உலகின் மிகச் சிறிய பகுதியொன்றில் அவரது பிரசங்கித்தல் மற்றும் போதனை ஆகியவற்றினால் அவருடைய ஊழியம் நிறைவேற்றப்பட்டது. இயேசு தமது சொந்த ஊழியத்தின் போது உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றிருந்தால், அவர் தம் ஊழியத்தை மாறுபட்ட வழியில், பல்வேறு பரவலான யுக்திகளையும் முறைகளையும் கையாண்டு நிறை வேற்றியிருப்பார்.

இரண்டாவது, இயேசுவின் வாழ்வு, ஊழியங்கள் மற்றும் மரணம் ஆகியவை வரவிருந்த ஏதோ ஒன்றுக்கு தயாரிப்பாக இருந்தன என்பதைச் சுவிசேஷங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இயேசு, “மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது’’ (மத். 4:17) என்று பிரசங்கித்தார். மலைப்பிரசங்கத்தில் அவர், “உம்முடைய இராஜ்யம் வருவதாக” (மத். 6:10) என்று ஜெபிக்குமாறு தம் சீஷர்களுக்குக் கற்பித்தார். இயேசு தம்முடைய அற்புதங்களினால் கூட்டங்கள் மேற்கொள்ளப்படுவதை, அதன் மறுசெயலாக அவரை அவர்கள் தங்கள் பூமிக்குரிய அரசராக்கும்படியான கருத்துடன் சுற்றி வந்ததை எச்சரிக்கையுடன் தவிர்த்து வந்தார். அவர் தமது பணி அட்டவணை அல்லது ஊழிய அட்டவணையை மக்கள் கூட்டமானது தமக்குக் கட்டளையிடுவதை அனுமதிக்காதிருந்தார். இயேசு ஒரு அற்புதத்தைச் செய்த பொழுது, அவர் சில வேளைகளில் அவ்வற்புதத்தைப் பெற்றுக் கொண்டவர்களிடம், “ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்” (மத். 8:4)[1] என்று கேட்டுக் கொண்டார். அவர் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தனிப்பட்ட வகையில் பயிற்சியளித்தார், ஆனால் அவர்களை விட்டுத் தாம் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்கென்று அவர்களைப் பயிற்றுவித்தார் என்பது உறுதி (யோவா. 14:19).

மூன்றாவது, இயேசுவின் ஊழியமானது நிறைவுறாத் தன்மை கொண்டிருந்ததாகச் சுவிசேஷங்கள் சித்தரிக்கின்றன. பிதாவானவர் என்ன செய்யும்படியாக இயேசுவை அனுப்பினாரோ, அதை அவர் செய்தார், ஆனால் தம் வாழ்வின் முடிவில், அவர் தம் பரத்துக்கேறுதலைத் தொடர்ந்து மற்ற நிகழ்ச்சிகள் மற்றும் வெளிப்பாடுகளை எதிர்பார்க்கும்படிப் பன்னிருவரைத் தயார் செய்தார். இயேசு அப்போஸ்தலர்களிடம், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' (யோவா. 14:26) என்று உரைத்தார். மேலும் அவர்களிடம் அவர், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13) என்றும் உரைத்தார். இயேசு உயிர்த்த பின், பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பாக, தம் அப்போஸ்தலர் களை உன்னதத்திலிருந்து வரும் பெலனைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் எருசலேமில் காத்திருக்கும்படி கட்டளையிட்டார். வல்லமை பெறுவதைத் தொடர்ந்து, அவர்கள் எருசலேம் தொடங்கி (சகல நாடுகளுக்கும்) மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பிரசங்கிக்க வேண்டியிருந்தது (லூக். 24:46-49).

நமது கர்த்தருடைய மரணத்திற்கு முன்னும் பின்னும் அவருடைய ஊழியத்தின் இந்தப் பண்புகள், பூமியில் அவருடைய ஊழியமானது சபை என்ற அவருடைய இராஜ்யத்தை நிலைநாட்ட இன்றியமையாத கூறுகளை ஒன்றாக்கிக் கொண்டு வரச் செய்யப்பட்டது என்று இணங்கத் தக்க வகையில் கூறுகின்றன. மத்தேயு 16:18ல் இயேசு தம் பூமிக்குரிய ஊழியத்தின் பாரத்தைத் தம் சீஷர்களுக்கு அறிவித்தார்: "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வ தில்லை." இவ்விதமாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்க ஒரு சுவிசேஷம் இருக்கும்படியாக அவர் வந்தார்.

தெற்கு டகோட்டாவில் ருஷ்மோர் என்ற குறிப்பிடத்தக்க மலையில் சிற்பங்கள் செதுக்கியவரும், வாஷிங்டன் D.C.யின், தலைநகரில் ஆபிரகாம் லிங்கன் அவர்களின் தலையை வடிவமைத்துச் (கல்லில்) செதுக்கிய வருமானவர் புகழ் பெற்ற சிற்பி கட்சன் போர்க்ளம் என்பவராவார். அவர் இச்சிலையைத் தனது பணி அரங்கில் ஒரு கரும் சலவைக் கல்லில் இருந்து செதுக்கியெடுத்தார். ஒவ்வொரு நாள் காலை வேளையிலும் அவருடைய பணி அரங்கைச் சுத்தம் செய்ய வந்த பெண்மணி, உயிருள்ளது போன்ற சிற்பத்தை முதன்முறையாகக் கண்ட பொழுது, ஒரு கணம் திகைப்புற்று, பின்பு "அந்தக் கருங் கல்லினுள் லிங்கன் பூட்டப்பட்டிருந்தார் என்பதை இவர் எவ்விதம் அறிந்தார்?" என்று கேட்டதாகக் கூறப்படுவது உண்டு. மற்றவர்கள் காண முடியாதிருந்ததை போர்க்ளம் காண முடிந்தது என்பதே அதற்குப் பதில் உரையாய் இருந்தது. அவர் கலைஞனுக்குரிய கண்ணும், சிற்பிக்குரிய உள்ளுணர்வும் கொண்டிருந்தார். அவரது திறன் மிக்க

கைகளும் தொலை நோக்குடைய சிந்தையும் அதை வெளிக்கொண்டு வரும் முன்பாகவே அம்முகத்தை அவரால் அந்தக் கல்லில் காண முடிந்திருந்தது.

இயேசு தம் பூமிக்குரிய ஊழியத்தின் போது கண்டதை நாம் சுவிசேஷங் களின் உதவியுடன் காண முடியும். வர இருந்த இராஜ்யத்திற்குரிய ஒரு தரிசனமும் மற்றும் அதற்கான தயாரிப்பும் அவருடைய ஊழியத்தில் அடைபட்டு இருந்தன. அவர், அதைப் பற்றிப் பிரசங்கித்து, அதற்காகத் தயார் செய்து, அதைத் தம் இரத்தத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கினார்.

## நடபடிகளினால் உறுதியாக்கப்பட்டது

இயேசுவின் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை தங்களுக்குப் பின்னால் சபையை உருவாக்குதல், இராஜ்யத்தைக் கொண்டு வருதல் என்ற கட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருந்தன என்பதை நடபடிகள் உறுதிப்படுத்துகின்றது. சுவிசேஷங்கள் இந்த சத்தியத்தைத் தெளிவாக அறிவிக்கின்றன, மற்றும் வண்ண மிகு உயிருள்ள விவரிப்பினால் நடபடிகள் இதை உறுதிப்படுத்துகின்றது.

நமது கர்த்தர் பரத்திற்கேறி பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெ கொஸ்தே அன்று பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது அற்புத மாய்ப் பொழியப்பட்டார் (அப். 2:1-4); இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் சுவிசேஷமானது முதன்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டது; விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் ஆகியவற்றினால் இந்த சுவிசேஷத்திற்குப் பதில் செயல் செய்யும்படி மக்கள் அழைக்கப்பட்டார்கள் (அப். 2:38; லூக். 24:46, 47); மற்றும், பிரசங்கிக்கப்பட்ட வசனத்தை ஏற்றுக் கொள்ளுதல், ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றினால் மூவாயிரம் பேர் அந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டார்கள் (அப். 2:41). ஆகையால், இரவைத் தொடர்ந்து பகல் வருவதுபோல, இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து நமது கர்த்தருடைய சபை பிறந்தது.

நடபடிகளில் எஞ்சியுள்ள வரலாறு என்பது பரிசுத்த அன்பின் சுடராக சபையானது எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா மற்றும் அதற்கப்பால் ரோமப் பேரரசின் மற்ற பகுதிகளுக்குப் பரவியதின் வரலாறாகவே உள்ளது. நடபடிகளில் ஏவுதல் பெற்ற பிரசங்கித்தல் நடைபெற்ற போதெல்லாம், கேள்விப்பட்டவர்கள், பிரசங்கிக்கப்பட்ட வசனத்திற்குக் கீழ்ப்படிவதினால் சபைக்குள் வந்தனர். நடபடிகளில் சுவிசேஷப் பயணம் ஒன்று நடைபெற்ற பொழுதில் எல்லாம், உலகின் புதிய பகுதிகளில் சபைகள் உதயமான நிலையில் விட்டுச் செல்லப்பட்டன. நடபடிகளில் பவுலின் மூன்று ஊழியப் பயணங்கள், எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் வரையிலும் உலகம் முழுவதிலும் சபைகளை நிலைநாட்டின (ரோமர் 15:19). நடபடிகளை வாசிக்கின்ற எவரும் கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையின் விளைவாக உண்டானது சபையே என்ற வெகுவான முடிவை உற்று நோக்காமல் எவரொருவரும் இருக்க முடியாது.

‘‘உலக சுவிசேஷ ஊழியத்தில் நாம், நமது பணிகளில் இயேசு பயன்படுத்திய அதே செயல்முறைகளையே பயன்படுத்த வேண்டும்.’’ எதிர்கால ஊழியத்திற்கென்று நாம் பன்னிரு மனிதர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்றுவிக்க வேண்டும். இயேசு தாம் பயன்படுத்திய செயல்முறையில், “உலக ஊழியம் செய்வது எவ்வாறு என்று நமக்குக் காண்பித்துள்ளார்’’ என்று ஒரு பிரசங்கியார் கூறியதை ஒருமுறை நான் கேட்டேன். இயேசு தாம் செய்த ஒவ்வொன்றிலும் நிச்சயமாகவே முழுநிறைவான வராயிருந்தார். இருப்பினும் அவருடைய ஊழியம் பற்றிய முழு நிறைவானதொரு படிப்பானது, அவரது ஊழிய நாட்களின் போது அவருடைய ஊழியம் உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்கும் படியாகச் செய்யப்பட்டதில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அது சபைக்கு அஸ்திபாரம் போடுதலாக (மட்டுமே) இருந்தது; அது உலக ஊழியத்திற்கான திட்ட வரைபடத்தில் பணிகளை ஒன்றுகூட்டி இடுதலாக மட்டுமே இருந்தது. அவருடைய ஊழியத்திற்கான அவரின் அணுகுமுறையில், அவர் தமது தனிச் சிறப்பான ஊழியத்திற்கு, அவர் நமக்குக் கொடுத்துள்ள உலகளாவிய ஊழியத்தினின்று மாறுபட்டிருந்த ஒரு ஊழியத்திற்கு அதை நிறைவேற்றப் பொருத்தமான வழிகளையும் முறைகளையும் பயன்படுத்தினார்.

---

*இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்க ஒரு சுவிசேஷம் இருக்கும்படியாக அவர் வந்தார்.*

---

அது போலவே, நடபடிகளில் அப்போஸ்தலர்களும் ஏவப்பட்ட மற்ற மனிதர்களும் நமது கர்த்தர் பயன்படுத்திய அதே அணுகுமுறைகளைப் பயன்படுத்தியிருப்பதாக நாம் காண்பதில்லை. அவர்கள் நமது கர்த்தர் செய்தது போலப் பயிற்றுவிக்கப் பன்னிருவரைத் தங்களைச் சுற்றி வைத்துக் கொண்டு, அவருடைய செயல்முறைமையை விரிவான வகையில் போலச் செய்து கொண்டிருக்கவில்லை. அப்போஸ்தலர்களும் ஏவப்பட்ட மற்றவர்களும் தங்களின் பிரசங்கித்தல் மற்றும் போதித்தலின் மூலமாக மக்களை சபைக்குள் கொண்டு வந்தார்கள்; பிறகு இந்தப் புதுக் கிறிஸ்த வர்கள் சபையின் ஒரு பாகம் என்ற வகையில் சபையினால் ஊழியம் மற்றும் சுவிசேஷத்துவம் ஆகியவற்றில் வளமூட்டப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, ஊக்கமூட்டப்பட்டு மற்றும் போதிக்கப்பட்டார்கள். இயேசுவின் பூமிக் குரிய ஊழியத்தின் விளைவாக சபையின் வாழ்வு உண்டாயிற்று என்பதை நடபடிகள் நமக்குக் காண்பிக்கின்றது. புதிய ஏற்பாட்டில் 48 சதவிகிதம் கிறிஸ்துவின் வாழ்வைக் கொண்டுள்ளது; எஞ்சியுள்ள 52 சதவிகிதமானது கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை உண்டாக்கிய சபையைப் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளது.

## நிருபங்களினால் மறுஉறுதிப்படுத்தப்பட்டது

புதிய ஏற்பாட்டு நிருபங்கள், சபை என்பது கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் இயற்கையான கனியாக உள்ளது என்ற சத்தியத்தின் பயன்பாட்டை வலியுறுத்துகின்றன. இந்த சத்தியத்தைச் சுவிசேஷ புத்தகங்கள் உறுதிப்படுத்துகின்றன, இதை நடபடிகள் பெருக்குகின்றன, மற்றும் இதை நிருபங்கள் பயன்படுத்துகின்றன. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் இருப்பதினால் கிறிஸ்துவின் வாழ்வுக்குப் பதில்செயல் செய்வது எப்படி என்று நிருபங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் கிறிஸ்துவிடம் வரத் தேர்ந்து கொண்ட மக்களுக்கு நிருபங்கள் எழுதப்பட்டன. கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் செயல்விளைவு புதிய கவனம் பெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். கிறிஸ்து கர்த்தராகக் கனப்படுத்தப்பட்டுள்ளார் என்பதும், நாம் அவருடைய சபையாராகி அதில் நிலைத்திருத்தலே அவருடைய பூமிக்குரிய சஞ்சரிப்பை நாம் தக்க வகையில் ஏற்றுக்கொள்ளுதலாகும் என்பதும் ஏவப்பட்ட மனிதர்கள் மூலமாக (வானத்திலிருந்த) தரப்பட்ட செய்தியாக இருந்தது.

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றவர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக வாழ்ந்து ஊழியம் செய்யும்படியாக ஒவ்வொரு நிருபத்திலும் வற்புறுத்தப் படுகின்றனர். நிருபங்களை ஒன்றுகூட்டிக் காணும் போது, அவைகள் உண்மையிலேயே, எல்லா வகையான சூழ்நிலைகளிலும், மாறுபட்ட இடங்களிலும் கிறிஸ்துவின் சபையாக இருந்து வாழ்வது எப்படி என்பதற்கு “வழிகாட்டிக் குறிப்பு நூல்” ஒன்றையே அளிக்கின்றன. அவைகள் நமக்கு கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நமது வாழ்வுக்குப் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைப் போதிக்கின்றன.

நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் மூலம் அவருடைய சரீரத்தில் பிரவேசிப்பதினால் ஆண்டவர் என்ற வகையில் இயேசுவுக்கு நம்மை ஒப்புவிக்கின்றோம். விசுவாசப் பதில்செயலின் இந்த நிறைவுப்படியைப் பவுல், கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதல் அல்லது கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல் (கலா. 3:27) என்பதுடன் ஒப்பிட்டார். நிருபங்களின்படி, எவரொருவரும், விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல் ஆகியவற்றை முன்னதாகச் செய்து, இரட்சிப்புக்காக ஞானஸ்நானத்தின் மூலம் அவருடைய சரீரத்தில் பிரவேசித்திராத வரையிலும் இயேசுவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தவராய் இருப்பதில்லை.

நாம் தேவனுடைய ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் தேவனுடைய குடும்பம் என்ற வகையில் ஒன்றுகூடி வாழ்ந்து ஆராதிப்பதினால், இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கனப்படுத்துகின்றோம். பவுல் பின்வருமாறு கூறினார்:

> யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா. 3:28).

*ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம் (ரோமர் 12:4, 5).*

*சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, ... ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள் (1 கொரி. 12:25-27).*

*வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் ... அவர்களுடனே சம்பாஷித்து ... (அப். 20:7).*

நாம் தேவனுடைய குடும்பம் என்ற வகையில் கிறிஸ்துவின் சபையாராக வாழ்ந்திருக்க மற்றும் ஆராதிக்கத் தவறுகின்ற பொழுது, கிறிஸ்து எதை நிறைவேற்ற வந்தாரோ அதிலிருந்து நாம் விலகிச் செல்பவர்களாகவும், அவர் எதை நிலைநாட்ட மரித்தாரோ, அதை அழிப்பவர்களாகவும் இருக்கின்றோம்.

இயேசு நம்மை, அவருடைய சரீரமாக, அவருடைய சபையாக இருப்பதற்கென்றே அழைத்துள்ளார், அதிகமான வேறொன்றிற்கும் அல்ல. அவருடைய மக்கள் கிறிஸ்துவின் சரீரம் என்பதைக் காட்டிலும் வேறு எதுவாகவாவது இருந்தார்கள் என்று நிருபங்கள் ஒருக்காலும் விவரிப்பதில்லை. நிருபங்களின் கூற்றுப்படி, இயேசு தம்மைப் பின்பற்ற ஒரே வழியை, தம்மைச் சேவிக்க ஒரே வழியை, தாம் ஏற்படுத்திய இரட்சிப்பையும் தம் இரத்தத்தையும் பெற்றுக் கொள்ள ஒரே வழியை மட்டுமே உண்டாக்கினார். அவருடைய ஆவிக்குரிய சரீரமாக இவ்வுலகில் விசுவாசத்துடன் வாழ்வதே அந்தத் துடிப்புள்ள வழியாக உள்ளது.

ஒரு வீட்டு மூலையொன்றில் ஒரு சிறுமி, வேதாகமம் ஒன்றைக் கண்டாள். அதை எடுத்துக் கொண்ட அச்சிறுமி, தன் தாயிடம், “இது என்ன புத்தகம் அம்மா?” என்று கேட்டாள். அவளுடைய தாய், “அது தேவனு டைய புத்தகமாகிய வேதாகமம்” என்று கூறினாள். அந்தச் சிறுமி தன்னை உறுத்திய உள்ளுணர்வுடன், “இதை நாம் ஒருக்காலும் பயன்படுத்தியிருக்க வில்லை, எனவே நாம், இதனை அவருக்கே திருப்பி ஏன் அனுப்பக் கூடாது?” என்று அறிவுறுத்தினாள்.

அதை நாம் வாசித்தும் கூட இன்னமும் உண்மையிலேயே பயன் படுத்தாமல் இருக்கக் கூடும் என்பது உண்மையாக உள்ளது. ஒவ்வொரு உரையாடலிலும் நாம் வேதாகமத்தை மேற்கோள் காட்டக் கூடும், அன்றாடம் நாம் அதை வாசிக்கக் கூடும், ஆனாலும் அதை நடைமுறைப் படுத்தத் தவறுகின்றோம். வேதாகமத்தை அங்கீகரிக்கப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்துதல் என்பது, நாம் கிறிஸ்துவின் சபையாராய் இருந்து அதை நடைமுறையில் பின்பற்றும்படியாக நம்மிடத்தில் கேட்கின்றது.

வேதாகமம் போதிக்கின்றபடியாக நாம் ஆகும் பொழுது மட்டுமே நாம் அதன் சரியான மற்றும் தக்க பயன்பாட்டைக் கைக்கொள்ளுகிறவர்கள் ஆகின்றோம்.

## முடிவுரை

ஆகையால், புதிய ஏற்பாடு முழுவதும் ஒன்றிணைந்து, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமான சபை என்பது, மனிதரானதில் கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய படைப்பு என்பதாகப் போதிக்கின்றது. இதனை வாக்குறுதி செய்வதினால் சுவிசேஷங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன, இதனைச் சித்தரிப்பதினால் நடபடிகள் இதனை உறுதிப்படுத்துகின்றது, மற்றும் இதனை வாழ்வுக்கு நடைமுறையில் பயன்படுத்துவதினால் நிருபங்கள் இதனை மறுஉறுதிப் படுத்துகின்றன.

நம் இரட்சிப்புக்காக வாழ்ந்து, மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்த ஒருவருக்கு நாம் பதில்செயல் செய்யக் கூடிய ஒரே வழியாக இருப்பது நாம் அவருடைய சபையில் பிரவேசித்து அதன் உண்மையுள்ள உறுப்பினர்களாய் வாழ்வது என்பதே என்று புதிய ஏற்பாடு கூறுவதால், பின்வரும் கேள்வி தொடருகின்றது: ‘‘நீங்கள் அவருடைய சரீரமாக வாழ்கின்றீர்களா?’’ வாழ்வின் முடிவுப் பகுதிக்கு வந்து, நீங்கள் வாழ்வின் உண்மையான நோக்கத்தைத் தவற விட்டுள்ளதாகக் காண்பது எவ்வளவு தவறானதா யிருக்கும்! ஒருவேளை அதை விட இன்னும் கவலைக்கிடமானதாக - தேவகுமாரன் இந்த பூமிக்கு வந்த நோக்கத்தைத் - தவற விட்டுள்ளதாகக் காண்பது எவ்வளவு பரிதாபமாயிருக்கும். இரட்சிப்பிற்கான தேவனுடைய செய்தியைப் புதிய ஏற்பாடு நமக்குக் கொடுக்கின்றது என்ற நிச்சயத்தைப் போலவே, கிறிஸ்து இந்த பூமிக்கு மானிட வடிவில் வந்தார் என்ற நிச்சயத்தைப் போலவே, அவருடைய சரீரத்தில் பிரவேசிக்காத எவரொருவரும், தம் வாழ்வுப் பயணத்தின் முடிவில், கிறிஸ்து இந்த பூமிக்கு ஏன் வந்தார் என்ற காரணத்தைத் தாம் தவற விட்டிருப்பதை அறிந்து கொள்வார் என்பது நிச்சயமானதாக உள்ளது. இந்த முடிவே புதிய ஏற்பாடு முழுவதிலும் அடிப்படைப் போதனையாக உள்ளது!

இயேசு இங்கு வாழ்ந்த தம் சுருக்கமான வாழ்வின் முடிவிடத்திற்கு வந்த பொழுது, அவரால், ‘‘பிதாவே, நீர் செய்யும்படி கேட்டுக் கொண்டவற்றை நான் செய்திருக்கிறேன். எனக்கென்று நீர் நியமித்த ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறேன்’’ என்று கூற முடிந்தது. அரண்மனை ஒன்றில் நீண்ட வாழ்வு வாழ்ந்து, சுயநல நோக்கங்களுக்காக அரசாளுவதைக் காட்டிலும், தேவனுடைய சித்தம் என்ற வட்டத்திற்குள், அவருடைய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே இந்தப் பூமியில் வாழ்வது என்பது மேன்மையானது. வாழ்வின் முடிவில் பல மக்களால், “தேவனே, இந்த பூமியில் நீர் எனக்குக் கொடுத்த ஆண்டுகளை வாழ்ந்து முடித்துள்ளேன், மற்றும் நான் செய்ய விரும்பியவற்றை மட்டுமே நான் செய்துள்ளேன். நான் எனக்காகத் தேர்ந்து கொண்ட ஊழியத்தை நான் நாடியுள்ளேன்” என்று மட்டுமே கூறக் கூடும்.

நாம் நமது வாழ்வின் முடிவை வந்தடையும் பொழுது, ஆச்சரியப்படத்

தக்க அளவில், "ஆண்டவரே, நான் என்னவாக இருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய உம் விருப்பத்தை நான் வேத வசனங்களிலிருந்து கண்டறிந்தேன், மற்றும் அந்த ஊழியத்திற்காக என்னை நான் ஒப்புக் கொடுத்துள்ளேன். இந்த பூமியில் உம்மை மகிமைப்படுத்த நான் உண்மையாய் முயன்றுள்ளேன், மற்றும் நீர் எனக்களித்த திட்டத்தின்படி வாழ நான் நாடியுள்ளேன். நான் கிறிஸ்துவின் சபையாக வாழ்ந்துள்ளேன்" என்று கூற முடியும் பொழுது அப்படியே ஆகட்டும்.

---

குறிப்பு

[1]*மத். 9:30; 12:16; 17:9; மாற். 1:44; 3:12; 5:43; 7:36; 8:30; 9:9; லூக். 4:41; 8:56; 9:21 ஆகியவற்றையும் காணவும். "ஒருவரிடத்திலும் சொல்ல வேண்டாம்" என்ற வினோதமான கட்டளையைப் பற்றி* J.W. *மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு எழுதினார்: "படை அதிகாரிகளிடமிருந்து இடையூறைத் தூண்டி விடும் வகையில் மக்கள் மத்தியில் உணர்வெழுச்சி அனாவசியமாக ஏற்படுவதற்கெதிராகக் காத்துக் கொள்ள இவ்வாறு கூறப்பட்டது என்று எண்ணப்படுகின்றது, மற்றும் இப்படிப் பட்ட உணர்வெழுச்சி இடையூறானது இயேசுவின் போதனைகளை மக்கள் அமைதியாய்க் கவனிக்க முடியாமல் ஆக்கி விடும். (மாற். 1:45ஐ ஒப்பிடுக.) சிலவேளைகளில், சந்தர்ப்பத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் தம் போக்கைத் திருப்பிப்போட்டு, மனிதர்களுக்குத் தாம் செய்தவற்றை எல்லாரிடமும் கூறும்படி உரைத்தார்"* (J.W. McGarvey, *The New Testament Commentary: Matthew and Mark* [N.p. 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 75).

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *உலக வரலாற்றில் நடந்துள்ளவற்றிலேயே மாபெரும் நிகழ்ச்சி எது? உங்கள் பதிலுக்கான காரணத்தைக் கொடுக்கவும்.*
2. *இயேசு முற்றிலும் மனிதராயிருந்தாரா அல்லது ஒரு பகுதி மட்டும் மனிதராய் இருந்தாரா?*
3. *இயேசு முற்றிலும் தெய்வீகமாயிருந்தாரா அல்லது ஒரு பகுதி மட்டும் தெய்வீகமாய் இருந்தாரா?*
4. *இயேசு ஏன் இந்த பூமிக்கு வந்தார்? அவர் நிறைவேற்ற வந்த ஒரே நோக்கம் என்ன?*
5. *இயேசுவின் ஊழியமானது தன்னுள் நிறைவுறாப் பண்பைக் கொண்டுள்ளதென்று நீங்கள் கூறுவீர்களா?*
6. *இயேசு தம் ஊழியத்தின்போது உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்க முயற்சி செய்தாரா?*
7. *இயேசுவின் ஊழியமானது வரவிருந்த ஒன்றிற்கான*

*தயாரிப்பாயிருந்தது எவ்வாறு என்று காண்பிக்கவும்.*

8. *அன்று நமது கர்த்தர் பயன்படுத்திய அதே செயல்முறைகளை இன்று நாம் பயன்படுத்த வேண்டுமா? ஆம் அல்லது இல்லை என்பதற்குக் காரணங்கள் தரவும்.*
9. *புதிய ஏற்பாட்டில் நிருபங்களின் பணிகள் யாவை?*
10. *இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு நாம் இன்றைய நாட்களில் எவ்விதம் பதில் அளிக்க வேண்டும்?*
11. *நாம் இயேசுவின் சபையாராய் இராமல், அவருடைய வாழ்வுக்குத் தக்க வகையில் பதில்செயல் செய்ய முடியுமா?*
12. *நாம் இயேசுவின் சபையாராய் வாழாமல், நமக்கென்று அவர் வைத்துள்ள ஊழியத்தை நிறைவேற்ற முடியுமா?*